செப்ரெம்பர் 2018

அன்புக்குரிய குடும்பங்களே,

மாணவர்களின் கருத்துகள் எமக்கு முக்கியமானவை. நவம்பர் 2018 இல்,York Region District School Board இலுள்ள (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்) எல்லா மாணவர்களும் ***Every Student Counts Survey (ESCS) (ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் கருத்தாய்வு)*** இல் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுவர். YRDSB இன் பன்வகைமையான மாணவச் சனத்தொகையையும், பாடசாலைக்கு உள்ளேயும் புறத்தேயும் மாணவர்களின் அனுபவங்களைப் புரிந்துகொள்வதுமே இந்த கணக்கெடுப்புக் கருத்தாய்வின் நோக்கமாகும். இக்கருத்தாய்வின் விளைவுகள் எமது பாடசாலைகளை மேம்படுத்த உதவுவதுடன் கீழ்வரும் முறைகளிலும் பயனளிக்கும்:

- மாணவர்களின் வெற்றியிற்கு தடையாக அமையும் அமைப்புரீதயான தடங்கல்களை அடையாளப்படுத்தி அவற்றை நீக்குதல்;
- கூடியளவு சமத்துவம் மற்றும் உள்ளடங்கலான பாடசாலைச் சூழலை உருவாக்குதல்; மற்றும்,
- மாணவர்களின் சாதனையாற்றலையும் நலனையும் மேம்படுத்துதல்.

இக்கருத்தாய்வை நடாத்துவதற்கும் தகவல் அந்தரங்கம், பாதுகாப்பு, மற்றும் பொருத்தமான சட்டதிட்டங்கள் காக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதற்கும் CCI Research நிறுவனம் மன்றத்துடன் பணிபுரிவதற்குப் பணியமர்த்தப்பட்டுள்ளது. இக்கருத்தாய்வுகள் வயதுக்கேற்றதாக இருப்பதை உறுதிசெய்வதற்கு, இரு கருத்தாய்வுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கருத்தாய்வுகள் விருப்பத்தேர்விற்குரியவையும் அனாமதேயமானவையும் ஆகும்.

**பாலர்வகுப்பு (Kindergarten) முதல் தரம் 6 வரையுள்ள மாணவர்களுக்கான கருத்தாய்வு**
பாலர்வகுப்பு முதல் தரம் 6 இல் குழந்தைகளைக் கொண்டுள்ள குடும்பத்தவர்கள் இல்லத்திலேயே தத்தம் பிள்ளைகளுடன் சேர்ந்து இக்கருத்தாய்வை இணையத்தில் பூர்த்திசெய்யும்படி அழைக்கப்படுவர். நவம்பர் மாதத்தில், செய்யவேண்டிய படிமுறைகளுடன் இணையத்தில் அணுகுவதற்கான தொடுப்பொன்று பாடசாலைக் கடிதமொன்றில் இல்லத்திற்கு அனுப்பப்படும். பாலர்வகுப்பு முதல் தரம் 6 இல் ஒன்றிற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்டுள்ள குடும்பத்தவர்கள், ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனி கருத்தாய்வுகளைப் பூர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். இணையத்திலுள்ள இக்கருத்தாய்வு, ஆங்கிலம், எளிதாக்கப்பட்ட சீனமொழி, பாரம்பரிய சீனமொழி, ஃபார்ஸி, குஜராத்தி, எபிரேய மொழி, கொரியன், பஞ்சாபி, ரசிய மொழி, தமிழ், உருது, மற்றும் வியற்நாமிய மொழி ஆகியவற்றில் கிடைக்கப்பெறும். அணுகுதற் காரணங்களால் உங்களுக்கு காகிதவடிவில், பெரிய எழுத்துகளில், அல்லது பார்வையற்றோர் புடையெழுத்தில் இக்கருத்தாய்வு தேவைப்பட்டால், தயவுசெய்து **ஒக்ரோபர் 9, 2018** இற்கு முதல் CCI Research உடன் 1-866-450-4907 இல் தொடர்புகொள்ளுங்கள்.

**தரம் 7 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கான கருத்தாய்வு**
நவம்பரில், தரங்கள் 7-12 இலுள்ள எல்லா மாணவர்களும் இக்கருத்தாய்வை வகுப்பு நேரத்தின்போது இணையத்திலே பூர்த்திசெய்யுமாறு அழைக்கப்படுவர். இணையத்திலுள்ள இக்கருத்தாய்வு, ஆங்கிலம், எளிதாக்கப்பட்ட சீனமொழி, பாரம்பரிய சீனமொழி, ஃபார்ஸி, ரசிய மொழி, தமிழ், மற்றும் உருது ஆகியவற்றில் கிடைக்கப்பெறும். அணுகுதற் காரணங்களுக்கு காகிதவடிவில், பெரிய எழுத்துகளில், மற்றும் பார்வையற்றோர் புடையெழுத்திலும் இக்கருத்தாய்வு கிடைக்கப்பெறும். இக்கருத்தாய்வைப் பூர்த்திசெய்வதற்கு உதவிதேவைப்படும் மாணவர்களுக்கு முன்கூட்டியே பாடசாலை அலுவலர்களால் இசைவளிப்புகள்

ஒழுங்குசெய்யப்படும். இக்கருத்தாய்வில் விருப்பத்தேர்விற்கமைய பங்குபற்றலாம். மாணவர்கள் பதிலளிக்க விரும்பாத கேள்விகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். நீங்கள் தரம் 7-12 இலுள்ள பிள்ளை(களி)ன் பெற்றார்/பாதுகாவலராகக் காணப்பட்டு, அவர்கள் இக்கருத்தாய்வைப் பூர்த்திசெய்வதை **விரும்பாவிட்டால்**, தயவுசெய்து **ஒக்ரோபர் 9, 2018** இற்கு முதல் CCI Research உடன் 1-866-450-4907 இல் தொடர்புகொள்ளுங்கள்.

மாணவர்களின் சாதனையாற்றலிற்கு தடங்கல்களாக அமையும் காரணிகளை இடம்காண்பதும் நீக்குவதும் இக்கருத்தாய்வின் முக்கியதோர் நோக்கமாக அமைவதால், YRDSB இற்கு இக்கருத்தாய்வின் தரவுகளுடன் மாணவர்களின் சாதனைத் தரவுகளை இணைக்க உதவும் தனித்துவமான எண்குறியொன்று ஒவ்வொரு கருத்தாய்விலும் காணப்படும். அனாமதேயத்தைக் காப்பதற்கு, கருத்தாய்வில் எவ்விதமான நேரடியான அடையாளப்படுத்தும் தகவல்களும் (உதாரணத்திற்கு உங்கள் பிள்ளையின் பெயர்) காணப்படமாட்டா. விளைவுகளின் பொழிப்பொன்று (தொகுக்கப்பட்ட தரவுகள் மட்டுமே) பாடசாலைகளிலும் மன்றத்தின் வலைதளத்திலும் இளவேனில் 2019 இல் கிடைக்கும்.

உங்களுக்கு இக்கருத்தாய்வைப் பற்றி ஏதேனும் கேள்விகள் எழுந்தால், உங்கள் பாடசாலையின் அதிபருடன் தொடர்புகொள்ளுங்கள். இக்கருத்தாய்வைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் (உதாரணத்திற்கு, அடிக்கடி வினவப்படும் கேள்விகள் மற்றும் கருத்தாய்வு வினாக்கள்) பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: www.yrdsb.ca/escs.

இந்த முக்கியமான முன்னெடுப்பு, நாம் சேர்ந்துழைத்து சமத்துவமான மற்றும் உள்ளடங்கலான பாடசாலைச் சூழலை உருவாக்குவதற்கு உதவும். பெற்றோரும் பாதுகாவலர்களுமே கல்வியில் எமது மிக வலுவான பங்குதாரர்களாவர்; உங்கள் ஆதரவிற்கு நாம் நன்றியளிக்கின்றோம்.

உண்மையுள்ள,



Louise Sirisko
Director of Education (கல்வி அதிகாரி)

இக்கடிதத்தின் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியொன்றைப் பெற விரும்பினால், தயவுசெய்து மன்றத்தின் வலைதளத்தைப் பார்வையிடுங்கள்: www.yrdsb.ca/escs

மொழிபெயர்ப்புகள் கீழ்வரும் மொழிகளில் கிடைக்கும்:

எளிதாக்கப்பட்ட சீன மொழி
பாரம்பரிய சீன மொழி
ஃபார்ஸி
குஜராத்தி
எபிரேய மொழி
கொரிய மொழி
பஞ்சாபி
ரசிய மொழி
தமிழ்
உருது
வியற்நாமிய மொழி